பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

04 04 2025 **FRIDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, தாய்லாந்தில் அரசுமுறைப்பயணத்தை முடித்துக்கொண்டு இலங்கை புறப்பட்டு சென்றார்.

2. எல்லைப்பகுதியையொட்டிய கிராமங்களின் மேம்பாட்டிற்கான இரண்டாம் கட்டத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

3. தொகுதி மறுசீரமைப்புப்பணிகள் நியாயமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

4. வக்ஃப் மசோதா ஏழை இஸ்லாமியர்களுக்கு வரப்பிரசாதமாகும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

5. பெங்களூரு ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Chirag Duhan** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, தாய்லாந்தில் அரசுமுறைப்பயணத்தை முடித்துக்கொண்டு இலங்கை புறப்பட்டு சென்றார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்த பிரதமரின் இந்த பயணம் உதவிடும் என்று எமது கொழும்பு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<<>>>>>>

எல்லைப்பகுதியையொட்டிய கிராமங்களின் மேம்பாட்டிற்கான இரண்டாம் கட்டத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், 6 ஆயிரத்து 839 கோடி ரூபாய் மதிப்பில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக கூறினார்.

மகாராஷ்ட்ரா, ஒடிஷா, சத்தீஸ்கர் மாநிலங்களுக்கு உட்பட்ட 15 மாவட்டங்கள் பயன்பெறும் வகையிலான நான்கு ரயில்வேத் திட்டங்களுக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்ததாக அவர் கூறினார்.

18 ஆயிரத்து 658 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று நிறைவடைந்தது.

இரு அவைகளும் மறுதேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டன.

இந்த கூட்டத்தெடர் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களவையில் 16 மசோதாக்களும், மாநிலங்களவையில் 14 மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டதாக தெரிவித்தார்.

வக்ஃப் மசோதா தொடர்பாக நாடாளுமன்ற வரலாற்றில் இல்லாத அளவிற்கு 31 மணிநேரம் விவாதம் நடைபெற்றதாக கூறினார்.

மக்களவையில் 14 மணிநேரமும், மாநிலங்களவையில் 17 மணிநேரமும் இம்மசோதா குறித்து விவாதிக்கப்பட்டதாக திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

அரசியல் சாசனத்துக்கு உட்பட்டே வக்ஃப் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு ரவிசங்கர் பிரசாத் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மசோதா குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

இதற்கிடையே, இந்த மசோதா அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்று காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு பிரமோத் திவாரி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக நீதிமன்றத்தை அணு க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

வக்ஃப் மசோதா இஸ்லாமியர்களின் உரிமையை பாதுகாக்கும் என்று மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், சமூக நீதியையும் இது உறுதி செய்யும் என்றார்.

<<<<<<<<>>>>>>

தொகுதி மறுசீரமைப்புப்பணிகள் நியாயமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மக்கள் தொகையை அடிப்படையாக கொண்டு தொகுதி மறுசீரமைப்புப்பணிகளை மேற்கொள்ளக்கூடாது என்று கோரியுள்ளார்.

<<<<<<<<>>>>>>

அரசு சட்டக்கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் பாடப்புத்தகங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படும் என்று சட்ட அமைச்சர் திரு ரகுபதி அறிவித்துள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசுகையில் இதற்கான அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

இந்த பாடப்புத்தங்கள் 22 லட்சம் ரூபாய் செலவில் மொழிபெயர்க்கப்பட்டு தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் விநியோகம் செய்யப்படும் என்றும் திரு ரகுபதி கூறினார்.

<<<<<<<<>>>>>>

மக்கள் பிரச்சினை பற்றி பேசுவதற்கு தமிழக சட்டப்பேரவையில் அனுமதி மறுக்கப்படுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சட்டப்பேரவையிலிருந்து இன்று வெளிநடப்பு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

ஊடகவியலாளர் சவுக்கு சங்கர் இல்லத்தின்மீது தாக்குதல் நடத்திய பிரச்சினை குறித்து விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இந்த தாக்குதல் சம்பவம் குறித்து சட்டப்பேரவையில் விவாதிக்கக்கூடாதா என்றும் திரு எடப்பாடி பழனிசாமி வினவினார்.

<<<<<<<<>>>>>>

வக்ஃப் மசோதா ஏழை இஸ்லாமியர்களுக்கு வரப்பிரசாதமாகும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

இன்று கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விரிவான ஆலோசனைகளுக்கு பிறகே இந்த மசோதா நிறைவேற்றப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இந்த மசோதா குறித்து முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உட்பட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் தவறான தகவல்களை பரப்பி வருவதாகவும் திரு அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

<<<<<<<<>>>>>>

பீடி தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை தகுதிவாய்ந்த அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த நிதியாண்டில், 32 கோடி ரூபாய் அளவிற்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் நலத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

திரைத்துறையை சார்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளும் இந்த உதவித்தொகையை பெற்றுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் நிகழ்ச்சிப்பிரிவு தலைவராக திரு ரமேஷ் பாபு இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடந்த 36 ஆண்டுகளாக  அகில இந்திய வானொலியின் பல்வேறு நிலையங்களில் அவர் பணியாற்றியுள்ளார்.

<<<<<<<<>>>>>>

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அருகே குடியிருப்புப்பகுதியில் புகுந்த சிறுத்தையை வனத்துறையினர் மயக்க ஊசி செலுத்தி பிடித்தனர்.

நான்கு மணிநேர போராட்டத்திற்கு பின்னர் சிறுத்தையை வனத்துறையினர் பிடித்ததாக எமது செய்தியாதளர் தெரிவிக்கிறார்.

*<u>(வாய்ஸ் பைட் - ராஜா — 31 செகண்ட்ஸ்)</u>*

<<<<<<<<>>>>>>

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார் சத்திரத்தில் உள்ள 600 ஆண்டுகள் பழமையான ஸ்ரீகதிர் நரசிங்கபெருமாள் கோவில் கும்பாபிஷேகம் வெகுவிமரிசையாக இன்று நடைபெற்றது.

இதில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*<u>(வாய்ஸ் பைட் - ராஜசேரன் - 38 செகண்ட்ஸ்)</u>*

<<<<<<<<>>>>>>

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 53 செகண்ட்ஸ்)*

<<<<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆட்டிசம் விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கிவைத்தார்.

--------

தூத்துக்குடி மாவட்டம் தருவைக்குளம் கிராமத்தை சேர்ந்த 25 மீனவர்களுக்கு மானிய விலையில் சாட்டிலைட் போன்களை ஆட்சியர் திரு இளம்பகவத் வழங்கினார்.

------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழில் பெயர் பலகை வைப்பதை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் ஆட்சியர் திருமதி அழகுமீனா தலைமையில் நடைபெற்றது.

-----------

நாமக்கல் மாவட்டத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறை கண்காணிப்பாளர் திரு ராஜேஷ் கண்ணன் எச்சரித்துள்ளார்.

---------------

சேலம் மாவட்டம் உருவாக்கப்பட்ட தினமான இன்று வரலாற்று சங்கத்தினர் மரபு நடைபயணம் மேற்கொண்டனர்.

------------------

தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதர் கோவில் கும்பாபிஷேக விழாவை நடத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையை சென்னை உயர்நீதிமன்றதின் மதுரை கிளை நீக்கியுள்ளது.

<<<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

பெங்களூரு ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Chirag Duhan** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 6-2, 7-6 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Ishaque Eqbal** –ஐ வென்றார்.

-----------

உலக ஈட்டி எறிதல் போட்டி முதல் முறையாக இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி, ஹரியானாவின் **Panchkula**–வில் மே 24-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

--------

கால்பந்து போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியா 127-ஆவது இடத்தில் உள்ளது.

**<<<<<<<<END>>>>>>**